# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

# 2013 ஒக்டோபர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

## நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்

III. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

IV. மனுக்கள்

V. கேள்விகள்

VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்

VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்**

இலங்கை மின்சார சபையில் வருடாந்தம் இடம் பெறும் அதிகளவு நட்டத்தை குறைப்பதற்கு எனக் குறிப்பிட்டு சென்ற ஏப்ரல் மாதத்து மின்சாரக் கட்டணத்தை அதிகரித்து அந்த நட்டத்திற்குரிய நிதியை பொது மக்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மழை கிடைக்காது நீர் வற்றியதன் காரணமாக நாட்டின் மின்சாரத் தேவையில் (18%) அளவு நீர் மின் உற்பத்தியின் மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பது இடம்பெற்றது எனவும், தனியார் மின் நிலையங்களின் மூலம் கூடிய விலைக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதும் வேறு முறைகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது பல மாத காலம் தொடக்கம் பெய்யும் அடை மழையின் காரணமாக நீர் தேக்கங்கள் நிரம்பி நீர் மீதமாக்கப்பட்டு 85% மின்சாரத்தினை உற்பத்தி செய்வது நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் இடம் பெறுகின்றது எனவே அதிகரிக்கப்பட்ட மின்சாரப் பட்டியலை உடனடியாக குறைத்து மக்களுக்கு சலுகையை வழங்குமாறு இந்த மேல் மாகாண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/v (01)13/05)**

**02. கௌரவ அசோகா லங்காதிலக உறுப்பினர்**

*30 வருட காலம் தொடக்கம் பயங்கரமான யுத்தத்திற்கு முகங்கொடுத்து எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்த எங்களுக்கு இன்று இந் நாட்டினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்டு மகிழ்ச்சி அடையக் கூடியதாக உள்ளது. இதைப் பார்க்கும் போது எங்களது எதிர்கால பரம்பரை எங்களை விட அதிஷ்டசாலிகளாகுவதுடன் இவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்மந்தமாக நாங்கள் பெருமையடையக் கூடியதாக உள்ளது.*

*இதன் மூலம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகமானது ஆசியாவுக்குமே ஆச்சரியம் மிக்க நடவடிக்கை ஒன்றாகும். இதன் மூலம் எங்களது நாட்டின் புவியியல் அமைப்புக் கூட மாற்றம் அடைந்துள்ளது. உலகத்தில் உற்பத்திச் செய்யப்படும் எந்தவொரு பாரிய கப்பல் ஒன்றுக்குக் கூட எங்கள் நாட்டில் சேவையைப் பெற்றுக் கொள்ளவும், உலகத்தில் எந்தவொரு நாட்டிற்கும் எங்களது துறைமுகத்தினூடாக சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இதன் மூலம் இடம் கிடைத்துள்ளது. பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களைக் கொண்டவர்கள் எவ்வாறு விமர்சித்த போதும் நாட்டை நேசிப்பவர்கள் இந்த விஷேடமான செயற்பாட்டினைப் பாராட்ட வேண்டும். நாட்டினைப் பாதுகாப்பதற்கு போராடிய இலங்கை மக்களின் நன்மைக்காக இவ்வாறான துறைமுகம் ஒன்றினைக் கட்டி மக்களுக்கு ஒப்படைத்ததற்கு மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் கௌரவ ரோஹித அபேகுணவர்தன அவர்களுக்கும் துறைமுக அதிகார சபையின் தலைவர் அவர்களுக்கும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எல்லா உத்தியோகத்தர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் இதனைப் பார்வையிட்டு பாராட்டினை வழங்கிய யாவருக்கும் இந்த மேல் மாகாண மாகாண சபை தனது நன்றியைத் தெரிவித்து ஆசிர்வதிக்கின்றது.* **(பி/v (01)13/06)**

X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.10.08 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.